சார்பு நீதிமன்றம், பரமத்தி.
முன்னிலை திரு.எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2025–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 04–ஆம் நாள் சனிக்கிழமை

வழக்கிடை மனு எண்.04/2024 இன் அசல் வழக்கு எண். 66/2020

சண்முகம் ... மனுதாரர்/பிரதிவாதி

/ எதிர் /

கொழந்தைவேலு ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 11.12.2024–ஆம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.பி.மணிமேகலை அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

அசல் வழக்கில், பதிலுரையில் திருத்தங்களை செய்ய அனுமதிக்கவேண்டும் என்று கோரி, உ.வி.மு.ச. கட்டளை 6–விதி 17–ன்–கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. மூலவழக்கு அண்டிமாண்டின் படி தொகை கிடைக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அசல் வழக்கானது, வாதி தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்ய 06.11.2024–அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி வழக்கில் குறுக்கு விசாரணை செய்ய பதிலுரையை படித்துப்பார்த்தபோது தான், பதிலுரை 2–வது பக்கத்தில், 3–வது வரியில் 2019– என்பதற்கு பதிலாக 2021–என தவறுதலாக டைப்பாகி உள்ள விபரம் தெரிய வந்தது.

எனவே, பதிலுரையை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. இல்லாதபட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டவிடும். மனுதாரருக்கு வழக்கில் நல்ல கட்சி உள்ளது. எனவே, பதிலுரையை திருத்தம் செய்ய அனுமதிக்கவேண்டி, இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் எதிருரைச்சுருக்கம்

மனு பொய்யும் மோசடியுமானது. சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத் தக்கதல்ல, உடனடியாக தள்ளுபடியாகத்தக்கது. இவ்வெதிர் உரையில் இவ்வெதிர் மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்ற அனைத்தையும் மனுதார் நிரூபிக்கவேண்டும். மனுச்சங்கதிகள் உண்மையல்ல. எதிர்மனுதாரரின் முதல் சாட்சியம் கடந்த 02.09.2024–தேதியில் பதிவு செய்யப்பட்டது. அதன்பின்னர், 09.09.2024, 17.09.2024, 19.10.2024 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. 19.10.2024–அன்று எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் கோரிக்கைக்கு ஏற்பட 2, 3–சாட்சிகளின் முதல் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டன. அதன்பின்னர் 28.10.2024–தேதியிலும், மனுதாரர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராமல் தற்போது ஏதோ 06.11.2024–அன்று தான் படித்துப்பார்த்ததாக கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர் எதிர் வழக்குரையில் 2021–என்று குறிப்பிட்டுள்ளதை 2019–என்று திருத்தவேண்டுமாய் கூறியுள்ளார். ஆனால், இந்த தாவா அண்டிமாண்டு 2018–அன்ற அவரால் எதிர்மனுதாரரிடம் இருந்து துகை பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுக்கப்பட்டது என்ற நிலையில் இந்த திருத்தம் அவசியமற்றதாகும். எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு ஒரு சங்கதியை சொல்லி அதனடிப்படையில் எதிர்மனுதாரர் முதல் சாட்சியம் அறித்த பின்னர், இவ்வாறு திருத்தம் செய்யக்கோருவது சட்டத்துக்கும், நியாயத்துக்கும் முரணானதாகும். இது post trial amendment ஆகும். இது அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரருக்கு பெருத்த பாதிப்பு ஏற்படும். வழக்கின் போக்கை திசை திருப்பவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மனுதாரர் தரப்பில் எவ்வித சட்ட முகாந்திரமுமில்லை. தாமதம் ஏற்படுத்தம் எண்ணத்துடன் தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அதனால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது, மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்று, இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதாகும்?

6. தீர்வு

இம்மனு எதிர்வழக்குரையில் மனுவில் கண்ட திருத்தம் செய்ய அனுமதிக்கவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இரு தரப்பு வாதங்களும், ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன.

8. இம்மனுவின் மனுதாரர், அசல் வழக்கில் பிரதிவாதி. இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு தாவா புரோநோட்டின்பேரில் பெற்ற கடனை மனுதாரர், திருப்பி செலுத்தவேண்டும் என்று கோரி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, வா.சா.1–முதல் 3–வரையான சாட்சிகள் குறுக்கு விசாரணைக்காக வாய்தா இடப்பட்டுள்ள நிலையில், இம்மனு எதிர்வழக்குரையில் திருத்தங்கள் செய்யவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை பக்கம் 2–ல், 3–வது வரியில் 2019–என்பதற்கு பதிலாக, 2021–என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எனவே, மேற்படி 2021–என்பதை நீக்கி, 2019–என்று திருத்தம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் வா.சா.1–முதல் 3–குறுக்கு விசாரணைக்காக வாய்தா இடப்பட்டுள்ள நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தாவா புரோநோட்டு 2018–ல் மனுதாரரால் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும் அதனால், மேற்படி திருத்தம் அவசியமாகிறது என்றும் அசல் வழக்கு விசாரணை துவக்கப்பட்ட பின்பு, மனுதாரர் கோரியுள்ள திருத்தம் செய்ய அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரருக்கு பெருத்த பாதிப்பு ஏற்படும் என்றும் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

10. அசல் வழக்கு விசாரணை துவக்கப்பட்ட பின்பு, மனுதாரர் எதிர்வழக்குரையில் திருத்தம் செய்யக்கோரியுள்ளார். திருத்தப்பட்ட கட்டளை 6, விதி 17–சி.பி.சி. படி வழக்கில் விசாரணை துவக்கப்பட்ட பின்பு, தரப்பினர்கள் கோரும் திருத்தங்களை நீதிமன்றம் அவசியம் ஏற்பட்டாலொழிய எளிதாக அனுமதிக்க இயலாது. அதன்படி பார்க்கும்போது, மனுதாரர் எதிர்வழக்குரையில் 2021–என்று குறிப்பிட்டுள்ளதை 2019–என்று திருத்தவேண்டும் என்று கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் தாவா பாண்டு 2018–ல் ஏற்பட்டதால், மேற்படி திருத்தம் அவசியமற்றது என்று ஆட்சேபணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஆட்சேபணையை பார்க்கும்போது, அசல் வழக்கில் விசாரணை துவக்கப்பட்ட பின்பு மனுதாரர் கோரியவாறு எதிர்வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டாலும், அது எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு எதையும் ஏற்படுத்தாது என்று தெரிய வருகிறது. மேலும், அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சங்கதிகளை பார்க்கும்போது, மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருத்தத்தின்படி தான், அதற்கு அடுத்துள்ள சங்கதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே, அசல் வழக்கில் வழக்கு விசாரணை துவக்க நிலையில் உள்ளதாலும், மனுதாரர் கோரியுள்ள திருத்தத்தை அனுமதித்தால், அது எதிர்மனுதாரருக்கு அதிக பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இல்லை என்பதாலும், வழக்கின் தரப்பினர்களுக்கு தங்கள் தரப்பை முழுமையாக முன்னிடுவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதாலும் அசல் வழக்கில் விசாரணை துவக்கப்பட்டிருந்தாலும், இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர் அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் விசாரணை துவக்கப்பட்டபின்பு இம்மனுவை தாக்கல் செய்து, அசல் வழக்கை காலதாமதப்படுத்தி, எதிர்மனுதாரருக்கு சிரமத்தை ஏற்படுத்தியுள்ளதால், இம்மனுவை செலவுத்தொகையோடு அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு மனுதாரர் செலவுத்தொகையாக ரூ.1,500/–ஐ எதிர்மனுதாரர்களுக்கு 09.01.2025–ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் அனுமதிக்கப்படுகிறது. தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வாய்தா 09.01.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 04.01.2025–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S NALINAKUMAR Digitally signed by S NALINAKUMAR Date: 2025.01.04 16:38:46 +0530

சார்பு நீதிபதி,

பரமத்தி.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :

இல்லை.

S NALINAKUMAR Digitally signed by S NALINAKUMAR Date: 2025.01.04 16:38:50 +0530

சார்பு நீதிபதி,

பரமத்தி.